# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
***********

முறையீட்டு மனு எண்: 171/2018/பே
ஆணை நாள் 17–12–2018

திரு. M. ஆறுமுக நயினார்,
உரிமையாளர்,
கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசி
2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர்,
சென்னை – 600 004.

–– முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
கீரமங்கலம் பேரூராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம். –– எதிர் மனுதாரர்.

**ஆணை.**

சென்னை, மைலாப்பூர், எண்.2, வெங்கடேச அக்ரஹாரம் சாலையினைச் சேர்ந்த திரு.எம். ஆறுமுக நயினார் என்பவரது 26.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 30.07.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 171/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சியின் நகர்புற சாலை மேம்பாட்டு திட்டப் பணிகளுக்கான ஒப்பந்த விளம்பரத்தினை தனது நிறுவனம் மூலம் விளம்பரப்படுத்திய வகையில் பட்டியல் எண் 356/2014–15 நாள் 04.03.2015 ன்படி ரூ.28,464/– மேற்படி கீரமங்கலம் பேரூராட்சி மூலம் இது வரை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 07.08.2018 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து, புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 17.09.2018 நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனு மீதான விளக்கத்தினை பெறும் பொருட்டு, முறையீட்டு மனுதாரர் மற்றும் கீரமங்கலம்

பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 03.12.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலரின் 07.12.2018 நாளிட்ட விளக்க அறிக்கையில், தான் இப்பேரூராட்சியில் 12.07.2018 அன்று பணியில் சேர்ந்ததாகவும், மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக ஆவணங்களை பார்வையிட்டு தனது அறிக்கையினை சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலரின் 04.12.2018 நாளிட்ட கடிதம் மூலம் மேற்படி முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள பேரூராட்சி பணிகளுக்கான விளம்பரத் தொகை ரூ.28,464/– பேரூராட்சி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலை எண். 756916/04.12.2018ன் மூலம் மேற்படி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் நகல் இம்முறைமன்ற நடுவத்திற்கும் வரப்பெற்றுள்ளது.

இந்நேர்வில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக, இம்முறைமன்ற நடுவ நடவடிக்கைக்கு பின்னர் புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையின்படி ரூ.28,464/– செலுத்தப்பட்ட விவரம் கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இம்முறையீட்டு மனு மீதான தொடர் நடவடிக்கை கைவிடப்படுவதென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்.

1.திரு. M. ஆறுமுக நயினார்,
உரிமையாளர்,
கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி
2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர்,
சென்னை – 600 004

2.செயல் அலுவலர்,
கீரமங்கலம் பேரூராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தஞ்சாவூர் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர்.